ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/55 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06

*2261/55 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

*ச.வ.பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோகித அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்கு விதிகள் *2021* ஆம் ஆண்டின் *07* ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (சரக்குகளையும் எண்ணெய் எரிபொருள்களையும் ஏற்றிச் செல்லுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இவ்வொழுங்கு விதிகளின் நோக்கமானது, *1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் VI க்கும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் வரைவாவணத்துக்கும், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப் பின்னரான ஏதேனும் திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I

### இவ்வொழுங்கு விதிகளின் ஏற்புடையனவாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையனவும் அவை எங்கேனும் ஈடுபட்டிருக்கக்கூடியனவுமான கப்பல்களுக்கும், ஏதேனும் சரக்கு சுமையேற்றப்பட்டுள்ளபோது அல்லது சுமையேற்றப்படுவதற்கு உட்கருதப்பட்டுள்ளபோது வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) அபாயகரமான பண்டங்களையும் கடல்சார் தீழ்ப்பாக்கிகளையும் ஏற்றிச்செல்லுதல் தொடர்பில் 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந் திகதிய 2261/56 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்லுதல்) ஒழுங்குவிதிகளிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் எல்லா சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். அவ்வொழுங்குவிதிகளிலுள்ள ஏதேனும் தேவைப்பாடு இவ்வொழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்றிச்செல்கையின் ஓர் அம்சத்தை ஒழுங்குபடுத்துமிடத்து, அவ்வொழுங்குவிதிகள் அந்த அளவுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) குறிப்பிட்டவொரு சாதனம் அல்லது அதன் வகை ஒன்று கப்பலொன்றில் வழங்கப்படுதல் வேண்டும் அல்லது கொண்டு செல்லப்படுதல் வேண்டும், அல்லது குறிப்பிட்ட ஏதேனும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் எனச் சமவாயம் அல்லது சமவாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணப்படுத்துகை தேவைப்படுத்துமிடத்து, (இவ்வொழுங்குவிதிகளில் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய வேறேதேனும் சாதனம் அல்லது ஏற்பாடு, ஆகக் குறைந்தது சமவாயத்தினால் அல்லது சமவாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவலினால் தேவைப்படுத்தப்பட்டதைப்போன்று பயனுடைதாகவுள்ளதென அவற்றின் பரீட்சிப்புகளின் மூலம் அல்லது வேறு வகையாக அவர் திருப்திப்படின், வேறேதேனும் சாதனம் அக்கப்பலில் வழங்கப்படுவதனை அல்லது கொண்டு செல்லப்படுவதனை, அல்லது வேறேதேனும் ஏற்பாடு செய்யப்படுவதனை அனுமதித்தல் வேண்டும்.

(2) அவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, தொழினுட்ப மற்றும் உயர்தொழில்சார் தகுதியையும் சுதந்திரத்தையும் பற்றிப் திருப்திகரமான உத்தரவாதங்களை முனைகின்ற ஒழுங்கமைப்பின் ஏனைய உறுப்புநாடுகளின் குழுக்களினால் அல்லது ஆய்வு கூடங்களினால் நிறைவேற்றப்பட்ட சரிபார்த்தல் மற்றும் சோதனைகளின் பெறுபேறுகள் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஐந்நூறு முழு மொத்தத் தொன்னளவுக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, கடற்பயணத்தின் பாதுகாப்பளிக்கப்பட்ட தன்மையும் நிலைமைகளும் சமவாயத்தின் அத்தியாயம் VI இன் பாகம் அ அல்லது ஆ வின் குறிப்பிட்ட எவையேனும் தேவைப்பாடுகளின் பிரயோகத்தைத் தேவைப்படுத்துவனவல்லவென அவர் கருதினால், பணிப்பாளர் தலைமையதிபதி, அந்தத் தேவைப்பாடுகளிலிருந்து அத்தகைய கப்பல்களுக்கு விலக்களிக்கலாம். அத்தகைய கப்பல்கள், தேவைப்பட்ட காப்பை உறுதிப்படுத்துவதற்கு வேறு பயனுள்ள வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது அத்தகையவொரு விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(4) மூன்றாம் உபஒழுங்குவிதியின் கீழ் கப்பல்களுக்கு வழங்கப்பட்டவொரு விலக்களிப்பானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவமொன்றில் இருத்தல் வேண்டும்.

## பாகம் II

### சரக்குகளையும் எண்ணெய் எரிபொருள்களையும் ஏற்றிச்செல்லுதல்

4. தானியம் தவிர்ந்த வேறு தொகையான திண்மச் சரக்குகளை ஏற்றிச்செல்லுதல், சர்வதேசக் கடலோர தொகையான திண்மச் சரக்குகள் சட்டக்கோவையின் இயைபான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக இருத்தல் வேண்டும்.

5. (1) (அ) சரக்கின் முறையான அடுக்குகைக்காகவும் காப்பான ஏற்றிச்செல்லுகைக்காகவும் அவசியமாகக்கூடியவாறான முற்காப்புகள் பயனுக்கு இடப்படுவதனை இயலச்செய்வதற்குச் சுமையேற்றுதலுக்கு முன்கூட்டியே போதுமான முறையில் சரக்கு பற்றித் தோதான தகவலைக் கப்பலேற்றுநர், கப்பற்றலைவருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய தகவல், கப்பலில் சரக்கைச் சுமையேற்று முன்னர் தோதான கப்பலேற்றல் ஆவணங்களின் மூலம் எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) உபஒழுங்குவிதி 1 (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட சரக்குப் பற்றிய தகவல் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(i) பொதுவான சரக்கு மற்றும் சரக்குக் கூறுகளில் ஏற்றிச்செல்லப்படும் சரக்கின் விடயத்தில், சரக்கின் விவரணம், சரக்கின் அல்லது சரக்குக் கூறுகளின் முழுமொத்தத் திரண்மம் மற்றும் சரக்கின் எவையேனும் இயைபான விசேட பண்பியல்புகள்:

(ii) தொகையான திண்மச் சரக்கின் விடயத்தில், சர்வதேசக் கடலோர தொகையான திண்மச் சரக்குகள் சட்டக்கோவையின் 4 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான தகவல்: அத்துடன்

(iii)சமவாயத்தின் அத்தியாயம் VII இன் 2 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வகுப்பாக்கஞ்செய்யப்பட்டாதவையும், ஆனால் இயல்திற ஆபத்தொன்றை உருவாக்கக்கூடிய இரசாயனப் பண்பியல்புகளைக் கொண்டிருப்பனவையுமானதொகையான சரக்குகளின் விடயத்தில் மேலே உப ஒழுங்குவிதி (ஆ) (ii) இனால் தேவைப்படுத்தப்பட்டதற்கு மேலதிகமாக அதன் இரசாயனப் பண்பியல்புகள் மீதான தகவல்.

(2) கப்பல்களில் சரக்குக் கூறுகளைச் சுமையேற்று முன்னர், கப்பலேற்றுநர், அத்தகைய கூறுகளின் முழுமொத்தத் திரண்மம் கப்பலேற்றல் ஆவணங்களில் வெளிப்படுத்தப்பட்ட முழுமொத்தத் திரண்மத்துக்கிணங்கவுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓர் அடிச்சட்டகத்தில் அல்லது இழுவையிணைப்பு வண்டியில் ஏற்றிச்செல்லப்பட்ட கொள்கலன்களைத் தவிர, ஒரு கொள்கலத்தில் ஏற்றிச்செல்லப்படும் சரக்கின் விடயத்தில், அத்தகைய கொள்கலன்கள் சமவாயத்தின் அத்தியாயம் III இன் 3 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு குறுகிய சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள வாகனச் சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றுகின்ற கப்பல்களின் மீதும் அவற்றிலிருந்தும் ஓட்டப்படும்போது, இவ்வொழுங்குவிதியின் பந்தி 1 (ஆ) (i) இற்கிணங்க முழுமொத்தத் திரண்மமானது, 2016 ஆம் ஆண்டு ஒகத்து 11 ஆந் திகதிய 1979/30 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வணிகக் கப்பற்றொழில் (கொள்கல முழுமொத்தத் திரண்மத்தைச் சரிபார்த்தல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்கக் கப்பலேற்றுநரினால் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(4) ஒரு கொள்கலத்தின் கப்பலேற்றுநர், சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மம் கப்பலேற்றல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். கப்பலேற்றல் ஆணவம்:

(அ) கப்பலேற்றுநரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்: அத்துடன்

(ஆ) கப்பலின் அடுக்குகைத் திட்டத்தின் தயாரிப்பில் பயன்படுத்தப்படுவதற்கு, கப்பற்றலைவரினால் அல்லது அவரது பிரதிநிதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, கப்பற்றலைவருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்கு மற்றும் முடிவிடப் பிரதிநிதிக்குப் போதியமுறையில் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) பொதியிடப்பட்டவொரு கொள்கலன் தொடர்பான கப்பலேற்றல் ஆவணம், சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தை வழங்காதுவிடின், மற்றும் கப்பற்றலைவர் அல்லது அவரது பிரதிநிதி மற்றும் முடிவிடப் பிரதிநிதி, பொதியிடப்பட்ட கொள்கலத்தின் சரிபார்க்கப்பட்ட முழுமொத்தத் திரண்மத்தைப் பெற்றுக்கொண்டிராவிஎன், அது கப்பலில் சுமையேற்றப்படுதலாகாது.

(6) (1) தானியத்தை ஏற்றிச்செல்வதில் ஈடுபடுகின்ற கப்பலொன்று தவிர, இவ்வொழுங்குவிதிகள் எந்தக் கப்பலுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்தக் கப்பல் ஒவ்வொன்றினதும் கப்பற் சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், சரக்கைக் கடலில் காப்பாக ஏற்றிச்செல்வதற்கு அவசியமான முற்காப்புகளைக் குறிப்பாகக் குறித்துரைக்கவேண்டியதும் அச்சரக்குக்கும் மற்றும் அதன் அடுக்குகைக்கும் பாதுகாப்பளிப்புக்கும் இயைபானதுமான தோதான ஆவணப்படுத்துகை கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆவணப்படுத்துகை, பின்வரும் காப்பான செயல்முறைச் சட்டக்கோவைகளுள் ஒன்றை அல்லது அதற்கதிகமான வற்றைக் கொண்டிருக்கலாம்:-

(அ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, தீர்மானம் A.714 (17) இன்மூலம் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரக்கு அடுக்குகைக்கான மற்றும் பாதுகாப்பளிப்புக்கான காப்பான செயல்முறைச் சட்டக்கோவை:

(ஆ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, தீர்மானம் A.714 (17) இன்மூலம் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்றள வேட்டுமரச் சரக்குகளை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களுக்கான காப்பான செயல்முறைச் சட்டக்கோவை: அத்துடன்

(இ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, தீர்மானம் A.434 (XI) இன்மூலம் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையான திண்மச் சரக்குகளுக்காக (BC சட்டக்கோவை) காப்பான செயல்முறைச் சட்டக்கோவை.

(3) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்றதும் தானியத்தை ஏற்றிச்செல்லுகின்றதுமான ஒவ்வொரு கப்பலினதும் கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், சர்வதேசத் தானியச் சட்டக்கோவை கப்பலில் கொண்டு செல்லப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) (அ) திண்ம மற்றும் திரவச் சரக்குகளைத் தவிர்ந்த சரக்குகளைத் தொகையாக ஏற்றிச்செல்கின்ற எல்லாப் பயணிக் கப்பல்களும் மற்றும் சரக்குக் கப்பல்களும், அத்துடன் சர்வதேசக் கடற்பயணங்களாகவிராத பயணங்களில் ஈடுபட்டுள்ளவையும் ஐந்நூறு தொன்களுக்குக் குறைவானவையுமான சரக்குக் கப்பல்களும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட சரக்குப் பாதுகாப்பளிப்புக் கைந்நூலொன்றைக் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

(ஆ) உபஒழுங்குவிதி 6(4) வில் குறிப்பீடு செய்யப்பட்ட சரக்குப் பாதுகாப்பளிப்புக் கைந்நூல், ஆகக்குறைந்தது ஒழுங்கமைப் பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட இயைபான வழிகாட்டுநெறிகளுக்குச் சமமான தரமொன்றுவரையேனும் வரையப்படுதல் வேண்டும்.

7. நச்சுத்தன்மையான அல்லது பற்றி எரியக்கூடிய வாயுவொன்றை வெளியேற்றுவதற்கு, அல்லது சரக்குக்கான இடத்தில் ஒட்சிசன் குறைபாடொன்றை விளைவிப்பதற்கு உட்பட்டதாகவுள்ளவொரு தொகையான திண்மச் சரக்கை இடம்பெயர்க்கும் போது, காற்றிலுள்ள வாயுவின் அல்லது ஒட்சிசனின் செறிவை அளவீடு செய்வதற்கான தோதான கருவியொன்று, அதன் பயன்பாட்டுக்கான விபரமான அறிவுறுத்தல்களுடன் சேர்த்து வழங்கப்படுதல் வேண்டும். அத்தகையவொரு கருவி, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வகையினதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கப்பற்றொகுதியினருக்கு அதன் பயன்பாடு பற்றிப் பயிற்சியளிக்கப்படுதலும் வேண்டும்.

8. குறிப்பாகத் தூமமூட்டல் நோக்கங்களுக்காகக் கப்பல்களில் பீடைகொல்லிகளின் பயன்பாடு பற்றித் தோதான முற்காப்புகள் எடுக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்வரும் சுற்றிக்கைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அத்தகைய முற்காப்புகள் கொண்டிருக்கலாம் :-

(அ) கப்பல்களில் பீடைகொல்லிகளின் காப்பான பயன்பாடுபற்றிய விதப்புரைகள் (காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட வாறான MSC/சுற்றிக்கை 612):

(ஆ) சரக்கிடங்களின் தூமமூட்டலுக்கு ஏற்புடையவையும் கப்பல்களில் பீடைகொல்லிகளின் காப்பான பயன்பாடு பற்றியவையுமான விதப்புரைகள் (காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான MSC.1/சுற்றறிக்கை 1264): அத்துடன்

(இ) சரக்கு இடப்பெயர்வுக் கூறுகளின் தூமமூட்டலுக்கு ஏற்புடையவையும் கப்பல்களில் பீடைகொல்லிகளின் காப்பான பயன்பாடு பற்றியவையுமான விதப்புரைகள் (காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான MSC.1 /சுற்றறிக்கை 1265)

9. கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) மேற்றளத்தின்மீது அல்லது மேற்றளத்தின்கீழ் ஏற்றிச்செல்லப்படும் சரக்கு, சரக்குக் கூறுகள் மற்றும் சரக்கு இடப்பெயர்வுக் கூறுகள், கடற்பயணம் பூராகவும், கப்பலுக்கும் கப்பலிலுள்ள ஆட்களுக்கும் சேதம் அல்லது ஆபத்து விளைவிப்பதனையும், கப்பலிலிருந்து சரக்கு இழக்கப்படுவதனையும் செயல்முறைக்குகந்த அளவுவரை தடுக்கும்வகையில் அவ்வாறு சுமையேற்றப்படுதல், அடுக்கப்படுதல் மற்றும் அவற்றுக்குப் பாதுகாப்பளிக்கப்படுதல்:

(ஆ) சரக்கு, சரக்குக் கூறுகள் மற்றும் சரக்கு இடப்பெயர்வுக் கூறுகள், கடற்பயணம் பூராகவும், கடற்கப்பலுக்கும் கப்பலிலுள்ள ஆட்களுக்கும் சேதம் அல்லது ஆபத்து விளைவிக்கப்படுவதனைத் தடுக்கும் வகையில் கூறினுள் அவ்வாறு பொதியிடப்படுதல் மற்றும் அவற்றுக்குப் பாதுகாப்பளிக்கப்படுதல் :

(இ) கப்பலுக்குக் கட்டமைப்புச்சார் சேதம் எதுவும் விளைவிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் கடற்பயணம் பூராகவும் போதிய நிலையுறுதியைப் பேணுவதற்கும், பாரமான சரக்குகளை அல்லது வழமைக்கு மாறான பௌதீகப் பரிமாணங்களையுடைய சரக்குகளைச் சுமைக்குமாறான பௌதீகப் பரிமாணங்களையுடைய சரக்குகளைச் சுமையேற்றும்போதும் இடம்பெயர்க்கும்போதும் தோதான முற்காப்புகள் எடுக்கப்படுதல்:

(ஈ) விசேடமாக வாகனச் சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களிலும் அக்கப்பல்களிலுள்ள சரக்குக் கூறுகளிலும் சரக்கு இடப்பெயர்வுக் கூறுகளிலும் உள்ள பாதுகாப்பளிப்பு ஒழுங்கேற்பாடு கள் தொடர்பாகவும் பாதுகாப்பளிப்பு இடங்களினதும் பிணைக்கும் கயிறுகளினதும் பலம் தொடர்பாகவும், அத்தகைய கப்பல்களில் சரக்குக் கூறுகளையும் சரக்கு இடப்பெயர்வுக் கூறுகளையும் சுமையேற்றும்போதும் இடம்பெயர்க்கும்போதும் தோதான முற்காப்புகள் எடுக்கப்படுதல் :

(உ) திருத்தப்பட்டவாறான, காப்பான கொள்கலன்களுக்கான சர்வதேசச் சமவாயத்தின்கீழ் (CSC) காப்பு அங்கீகாரத் தகட்டில் சுட்டிக்காட்டப்பட்ட அதிகபட்ச முழுமொத்த எடைக்கு மேற்பட கப்பற்சரக்குக் கொள்கலனைகள் சுமையேற்றப்படாதிருத்தல்:

(ஊ) உபஒழுங்குவிதி 6 (4) (அ) ஏற்புடையதாகவுள்ள எல்லாக் கப்பல்களிலும் உள்ள சரக்கு, சரக்குப் பாதுகாப்பளிப்புக் கைந்நூலுக்கிணங்க ஏதேனும் கடற்பயணம் பூராகவும் அடுக்கப்பட்டு அதற்குப் பாதுகாப்பளிக்கப்படுதல்:

(எ) வாகனச்சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களில் உள்ள சரக்குக்கான இடங்களைக் கொண்டவையும் ஒழுங்குவிதி உள்ள சரக்குக்கான இடங்களைக் கொண்டவையும் ஒழுங்குவிதி 6 (4)(அ) ஏற்புடையதாகின்றவையுமான எல்லாக் கப்பல்களிலும் உள்ள சரக்கு, கப்பலானது தரிப்பிடம் ஒன்றை விட்டுச்செல்லு முன்னர் சரக்குப் பாதுகாப்பளிப்புக் கைந்நூலுக்கிணங்க ஏதேனும் கடற்பயணம் பூராகவும் அடுக்கிவைக்கப்படுதல் மற்றும் அதற்குப் பாதுகாப்பளிக்கப்படுதல்.

10. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தி மூன்றாமாண்டின் கப்பல்களிலிருந்தான தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயத்தின் பின்னிணைப்பு 1 இன் ஒழுங்குவிதி 1 இல் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு, அது தொடர்பாக 1978 ஆம் ஆண்டின் வரைவாவணத்தில் திரிபுபடுத்தப்பட்டவாறாக, எண்ணெய்யை அல்லது எண்ணெய் எரிபொருளை ஏற்றிச்செல்கின்ற கப்பல்களுக்கு, தொகையான எரிசரக்காக அத்தகைய எண்ணெயைச் சுமையேற்றுவதற்கு முன்னர் அல்லது எண்ணெய் பொருளைக் கப்பற்கரிக்கலமிடுமுன்னர், ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட விதப்புரையின் அடிப்படையில், பொருட்காப்புத் தரவுத் தாள்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

11. (1) கடற்பயணங்களின்போது தொகையான திரவச் சரக்குகளின் பௌதீகக் கலத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு புதிய தயாரிப்புப் பெயருடனான சரகொன்றை எய்தும் உட்கருத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு சரக்குகளை உள்ளக ரீதியில் சுற்றி வழங்குவதற்குக் கப்பலின் சரக்குப் பம்பிகளும் குழாய் வழிகளும் அதன்மூலம் பயன்படுத்தப்படும் நடைமுறையைப் பௌதீகக் கலத்தல் குறிப்பீடுசெய்கின்றது. இந்தத் தடையானது, கப்பலின் காப்புக்காக அல்லது கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்காகச் சரக்குக் கைமாற்றல்களைக் கப்பற்றலைவர் பொறுப்பேற்பதனைத் தடுப்பதில்லை.

(2) கடற்படுக்கைக் கனிப்பொருள் மூலவளங்களின் தேடுகை மற்றும் பயன்பாட்டுத் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கப்பல்களில் அத்தகைய தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படுவதற்காகத் தயாரிப்புகளைக் கலத்தலுக்கு 1 ஆம் பந்தியிலுள்ள தடை ஏற்டையதல்ல.

(3) கடற்பயணங்களின்போது ஒரு கப்பலிலான ஏதேனும் தயாரிப்பு நடைமுறை தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு கப்பலின் சரக்குக்கும் வேறேதேனும் பதார்த்தத்துக்கும் அல்லது சரக்குக்கும் இடையே அதன்மூலம் இரசாயன எதிர்த்தாக்கமொன்று இடம்பெறுகின்ற ஏதேனும் வேண்டுமென்ற தொழிற்பாட்டைத் தயாரிப்பு நடைமுறைகள் குறிப்பீடு செய்கின்றன.

(4) மூன்றாம் பந்தியிலுள்ள தடையானது, கடற்படுக்கைக் கனிப்பொருள் மூலவளங்களின் தேடுகை மற்றும் பயன்பாட்டுத் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கப்பல்களில் அத்தகைய தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கப்பல்களில் அத்தகைய தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படுவதற்காகச் சரக்குகளின் தயாரிப்பு நடைமுறைகளுக்கு ஏற்புடையதல்ல.

## பாகம் III

### தானியம் தவிர்ந்த தொகையான சரக்குகளுக்கான விசேட ஏற்பாடுகள்

12. (1) தொகையான சரக்கொன்றைச் சுமையேற்று முன்னர், கப்பற்றலைவர், கப்பலின் நிலையுறுதியும் நியமச் சுமையேற்றல் நிபந்தனைகளுக்காகச் சரக்கையும் அடிச்சுமையையும் பகிர்ந்தளித்தல் பற்றியும் எல்லாமடங்கிய தகவலைக் கொண்டுள்ளதும் சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் 5-1 ஆம் ஒழுங்குவிதியைப் பின்பற்றி வழங்கப்பட்டதுமான நிலையுறுதி பற்றிய தகவலை உடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஒன்றில் ஒழுங்குவிதி 5(1) (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழில்

(அ) சுட்டிக்காட்டப்பட்ட சரக்கின் ஈர உள்ளீடு அதன் இடம்பெயர்தகு ஈர வரையறைக்குக் குறைவாக இருந்தாலொழிய; அல்லது

(ஆ) ஈர உள்ளீடு அவ்வரையறைக்கு மேற்படவிருப்பின், சரக்கை அசைக்கும் விடயத்தில் போதிய நிலையுறுதியை உறுதிப்படுத்துவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்குத் தோதான காப்பு ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டு கப்பலானது போதிய கட்டமைப்புச்சார் முழுமையான தன்மையைக் கொண்டிருந்தாலொழிய,

கப்பற்றலைவர் திரவமாகக்கூடிய செறிவுகளை அல்லது வேறு சரக்குகளைச் சுமையேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஒழுங்குவிதி 5 (1) (ஆ) (iii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையான சரக்கொன்றைச் சுமையேற்று முன்னர், அதன் காப்பான ஏற்றிச்செல்கைக்காகத் தோதான விசேட முற்காப்புகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(4) கப்பற்றலைவர் :-

(அ) உபஒழுங்குவிதி (1) இனால் தேவைப்படுத்தப்பட்ட தகவலைத் தனதுடைமையில் வைத்திருந்தாலொழியவும் ;

(ஆ) உபஒழுங்குவிதி (1) இன் கீழ் வழங்கப்பட்ட நிலையுறுதித் தகவலுக்கிணங்க உத்தேசச் சுமேயேற்றுதல் ஒழுங்கேற்பாடுகள் போதிய நிலையுறுதியை உறுதிப்படுத்துமெனக் கணிப்பீடுகளின் மூலம் அவர் திருப்திப்பட்டாலொழியவும் ; அத்துடன்

(இ) உபஒழுங்குவிதி (3) ஏற்புடையதாகவுள்ள ஒரு சரக்கின் விடயத்தில், அப்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்ட முற்காப்புகள் எடுக்கப்பட்டுள்ளனவென அவர் திருப்திப்பட்டாலொழியவும்,

சரக்கைச் சுமையேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளுதலாகாது.

13.(1) (அ) இவ்வொழுங்குவிதியில், "முடிவிடப் பிரதிநிதி" என்பது, கப்பலானது, சுமையேற்றுகின்ற அல்லது சுமையிறக்குகின்ற முடிவிடத்தினால் அல்லது வேறு செயலிடத்தினால் நியமிக்கப்பட்டவரும், குறிப்பிட்ட கப்பல் தொடர்பாக அம்முடிவிடத்தினால் அல்லது செயலிடத்தினால் நடாத்தப்பட்ட தொழிற்பாடுகளுக்குப் பொறுப்புள்ளவருமான ஆளொருவர் என்று பொருளாகும்.

(ஆ) உபஒழுங்குவிதிகள் (3) மற்றும் (5) என்பவற்றின் நோக்கங்களுக்காக, இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தின் தோதான அதிகாரசபையானது இலங்கைத் துறைமுக அதிகாரசபையாகவிருத்தல் வேண்டும். துறைமுகத்திலுள்ள ஒரு முடிவிடம் இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் தொழிற்படுத்தப்படாவிடின், அப்போது முடிவிடத்தின் தொழிற்படுத்துநர் தோதான அதிகாரியாகவிருத்தல் வேண்டும்.

(2) கப்பலின் கட்டமைப்பில் மிதமிஞ்சிய அழுத்தங்களைத் தடுப்பதனைக் கப்பற்றலைவருக்கு இயலச்செய்வதற்குச் சரக்குச் சுமையேற்றுதல் கைந்நூலொன்று கப்பலுக்கு வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவது கப்பற்சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

சரக்குத் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாகவுள்ள கப்பலின் அலுவலர்கள் பரிச்சயமாகவுள்ள ஒரு மொழியில் இது எழுதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இம்மொழி ஆங்கிலமாகவிராதிருப்பின், ஆங்கில மொழியிலும் எழுதப்பட்ட கைந்நூலொன்று கப்பலுக்கு வழங்கப்படுதல் வேண்டும். கைந்நூலானது, ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட சிறுபுத்தகங்களாக இருக்கலாமென்பதுடன் குறைந்த பட்சத்தில் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும் :-

(அ) சமவாயத்தின் அத்தியாயம் II-I இன் ஒழுங்குவிதி 5-1 இனால் தேவைப்படுத்தப்பட்ட அளவுக்கு நிலையுறுதித் தரவு;

(ஆ) அடிச்சுமையிடுதல் மற்றும் அடிச்சுமையகற்றுதல் வீதங்களும் கொள்ளளவுகளும்;

(இ) தாங்கி மேல் தட்டத்தின் மேற்றளப்பரப்பின் ஒரு கூறுக்கு அதிகபட்ச அனுமதிக்கத்தக்க சுமை;

(ஈ) சரக்கிடம் ஒன்றுக்கு அதிகபட்ச அனுமதிக்கத்தக்க சுமை;

(உ) சுமையேற்றல், சுமையிறக்குதல், அடிச்சுமையிடுதல் தொழிற்பாடுகள் மற்றும் கடற்பயணத்தின்போது மிக்க பாதகமான தொழிற்பாட்டு நிலைமைகள்மீதான எவையேனும் வரையறைகளுட்பட, கப்பலின் கட்டமைப்பினது பலம் தொடர்பாகப் பொதுவான சுமையேற்றுதல் மற்றும் சுமையிறக்குதல் அறிவுறுத்தல்கள்;

*(ஊ)* ஏற்புடையனவாயின், பணிப்பாளர் தலைமயதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் விதிக்கப்பட்ட மிக்க பாதகமான தொழிற்பாட்டு நிலைமைகள்மீதான வரையறைகள்போன்ற எவையேனும் விசேட மட்டுப்பாடுகள்; அத்துடன்

*(எ)* பலம்பற்றிய அணிப்பீடுகள் தேவைப்படுமிடத்து, சுமையேற்றுதல், சுமையிறக்குதல் மற்றும் கடற்பயணத்தின்போது கப்பலின் உடற்கோப்புமீது அதிகபட்ச அனுமதிக்கத்தக்க வலுக்களும் குறுகிய காலங்களும்.

*(3)* ஒரு தொகையான திண்மச் சரக்கு சுமையேற்றப்படுமுன்னர் அல்லது சுமையிறக்கப்படு முன்னர், கப்பற்றலைவரும் முடிவிடப் பிரதிநிதியும், சுமையேற்றுதல் அல்லது சுமையிறக்குதலின் உட்கருதப்பட்ட வேகம், உட்கருதப்பட்ட பாய்ச்சல்களின் எண்ணிக்கை மற்றும் கப்பலின் அடிச்சுமையகற்றுதல் அல்லது அடிச்சுமையிடுதல் ஆற்றல் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு-

*(அ)* கப்பலின்மீது அனுமதிக்கத்தக்க வலுக்களும் குறுகிய காலங்களும் சுமையேற்றல் அல்லது சுமையிறக்குதலின்போது விஞ்சப்படாதிருப்பதனை உறுதிப்படுத்தவேண்டியதும்; அத்துடன்

*(ஆ)* சுமையேற்றுல் அல்லது சுமையிறக்குதலின் தொடர்ச்சி, அளவு மற்றும் வீதம் என்பவற்றை உள்ளடக்கவேண்டியதும்,

ஆன ஒரு திட்டம் பற்றி உடன்படுதல் வேண்டும். இத்திட்டமும் அதற்கான எவையேனும் அடுத்துப்பின்னரரான திருத்தங்களும் துறைமுக அரசின் தோதான அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*(4)* கப்பற்றலைவரும் முடிவிடப் பிரதிநியும், உபஒழுங்குவிதி *(3)* இன்கீழ் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட திட்டத்துக்கிணங்க சுமையேற்றுதல் மற்றும் சுமையிறக்குதல் தொழிற்பாடுகள் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(5)* சுமையேற்றுதலின் அல்லது சுமையிறக்குதலின்போது உபஒழுங்குவிதி *(2)* இல் குறிப்பீடு செய்யப்பட்ட கப்பலின் வரையறைகளுள் எவையும் விஞ்சப்படின் அல்லது சுமையேற்றுதல் அல்லது சுமையிறக்குதல் தொடர்ந்தால் அவ்வாறு வரக்கூடியதாகவிருப்பின், கப்பற்றலைவர் தொழிற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான உரிமையையும் எந்தத் துறைமுக அரசின் தோதான அதிகார சபையிடம் திட்டமானது சம்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்தத் துறைமுக அரசின் தோதான அதிகாரசபைக்கு அதற்கிணங்க அறிவிப்பதற்கான கடப்பாட்டையும் கொண்டுள்ளார். கப்பற்றலைவரும் முடிவிடப் பிரதிநிதியும் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். சரக்கைச் சுமையிறக்கும்போது, கப்பற்றலைவரும் முடிவிடப் பிரதிநிதியும், சுமையிறக்குதல் முறை கப்பலின் கட்டமைப்புக்குச் சேதம் விளைவிக்காதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(6)* கப்பலின் ஆளணியினர் தொடர்ச்சியாகச் சரக்குத் தொழிற்பாடுகளைக் கண்காணிப்பதனைக் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். இயன்றவிடத்து, வழங்கப்பட்ட தொன்னளவு எண்களை உறுதிப்படுத்துவதற்குச் சுமையேற்றலின்போதும் சுமையிறக்கலின்போதும் கப்பலின் நீர் ஆழம் கிரமமாகச் செவ்வை பார்க்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு நீர் ஆழமும் தொன்னளவு அவதானிப்பும் சரக்குப் பேரேடொன்றில் பதியப்படுதல் வேண்டும். உபஒழுங்குவிதி *(3)* இன்கீழ் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட திட்டத்திலிருந்து குறிப்பிடத்தக்க விலகுதல்கள் கண்டுபிடிக்கப்படின், சரக்கு அல்லது அடிச்சுமைத் தொழிற்பாடுகள் அல்லது இரண்டும், விலகுதல்கள் திருத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குச் சரிசெய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### தானியத்தை ஏற்றிச்செல்லல்

*14. (1)* இவ்வொழுங்குவிதிகளின் வேறெவையேனும் ஏற்புடையனவான தேவைப்பாடுகளுடன் சேர்த்து, தானியத்தை ஏற்றிச்செல்கின்ற சரக்குக் கப்பல் ஒன்று சர்வதேசத் தானியச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டக்கோவையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அதிகாரவளிப்பாவணமொன்றை வைத்திருத்தலும் வேண்டும். ஓர் இலங்கைக் கப்பலின் விடயத்தில் அதிகாரவளிப்பாவணம், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் வழங்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, சர்வதேசத் தானியச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகள் கட்டாயமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*(2) (அ)* இலங்கைக் கப்பலொன்று, *(1)* ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரவளிப்பாவணத்தை இலங்கைக்கு வெளியேயான நீர்ப்பரப்புகளில் வைத்திருக்கத் தவறுமிடத்து, கப்பலானது அதன் உத்தேசிக்கப்பட்ட சுமையேற்றப்பட்ட நிலையில் சர்வதேசத் தானியச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமெனக் கப்பற்றலைவர், சுமையேற்றுகின்ற துறைமுகத்தின் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்திலுள்ள தோதான அதிகாரசபையைத் திருப்திப்படுத்தும் வரை அத்தகைய கப்பல் தானியத்தைச் சுமையேற்றுதலாகாது;

(ஆ) இலங்கைக் கப்பலொன்றல்லாத கப்பலொன்று (1) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரவளிப்பாவணத்தை வைத்திருக்கத் தவறுமிடத்து, அத்தகைய கப்பல், அதன் உத்தேசிக்கப்பட்ட சுமையேற்றப்பட்ட நிலையில் சர்வதேசத் தானியச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமெனக் கப்பற்றலைவர் பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்தும்வரை தானியத்தைச் சுமையேற்றுதலாகாது; அத்துடன்

(இ) உபஒழுங்குவிதிகள் (2) (அ) மற்றும் (2) (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட இரு விடயங்களிலும், அத்தகைய கலன்களின் கப்பற்றலைவர், விடயத்துக்கேற்ப, ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அப்பொருள்பட்ட ஆவணமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது ஏற்பாடுகள்

15. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித் உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

16. சமவாயத்தின் அத்தியாயம் VI இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

18. இவ்வொழுங்கு விதிகளில்;

"சமவாயம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் அத்துடன் அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

"சட்டக்கோவை" என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறாகத் தீர்மானம் MSC.268 (85) இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுகொள்ளப்பட்ட, சர்வதேசக் கடலோர தொகையான திண்மச் சரக்குகள் (IMSBC) சட்டக்கோவை என்று பொருளாகும்;

"சர்வதேசத் தானியச் சட்டக்கோவை" என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறாகத் தீர்மானம் MSC.23 (59) இனால் ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, தொகையாகத் தானியத்தைக் காப்பாக ஏற்றிச்செல்லலுக்கான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"ஒழுங்கமைப்பு" என்கது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"வாகனச் சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களை ஏற்றிச்செல்கின்ற கப்பல்" என்பது, சமவாயத்தின் அத்தியாயம் II-2 இன் 3 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு வாகனச்சில்லினால் ஏற்றியிறக்கப்படக்கூடிய வாகனங்களுக்கான இடங்களை அல்லது விசேட வகுதியினவான இடங்களைக் கொண்டுள்ள ஒரு பயணிகள் கப்பல் என்று பொருளாகும்;

"இலங்கைத் துறைமுக அதிகார சபை" என்பது, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட நிறுவகம் என்று பொருளாகும்; அத்துடன்

*"குறுகிய சர்வதேசக் கடற்பயணம்" என்பது, கப்பலொன்று எந்தச் சர்வதேசக் கடற்பயணத்தின்போது பயணிகளும் கப்பற்றொகுதியினரும் காப்பாக இடப்படக்கூடிய ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து 200 மைல்களுக்கு மேற்படாதவொரு தூரத்திலுள்ளதோ அந்தச் சர்வதேசக் கடற்பயணமொன்றாகவுள்ளது. கடற்பயணம் தொடங்குகின்ற நாட்டின் கடைசியாக வந்தடைந்த துறைமுகத்துக்கும் இறுதிச் சேரிடத் துறைமுகத்துக்கும் இடையேயான தூரமோ அல்லது திரும்பிவரும் பயணமோ 600 மைல்களை விஞ்சுதலாகாது. இறுதிச் சேரிடத் துறைமுகம், கப்பலானது கடற்பயணத்தைத் தொடங்கிய நாட்டுக்கு அதன் திரும்பச்செல்லும் கடற்பயணத்தைத் தொடங்குகின்ற அட்டவணைப்படுத்தப்பட்ட கடற்பயணத்தில் கடைசியாக வந்தடையும் துறைமுகமாகவுள்ளது.*